DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 420/2023

List of Witness : Lw9

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜகோபால் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஆர்.செல்லத்துரை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/02/2024

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மு.நி.காவலர் 1320 சௌந்திரபாண்டி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். அவரது கையெழுத்து மற்றும்கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் கடந்த 2020 ம் ஆண்டு ரெட்டியார்சத்திரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 16.10.2020 ம் தேதி ரெட்டியார்சத்திரம் காவல்நிலையத்தில் மு.நி.காவலர் 1320 சௌந்திரபாண்டி நிலைய பொறுப்பில் இருந்த போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நரசிங்கபுரத்தை சேர்ந்த கருப்பணகவுண்டர் மகன் பழனிச்சாமி என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார்வாக்குமூலத்தை பெற்று 7.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண் 1096/2020 பிரிவுகள் 147,148, 294(பி), 324,506(2) இதச ஆக வழக்கு பதிவுசெய்து முதல்தகவல்அறிக்கை மற்றும்புகார்வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து கனம்குற்றவியல் நீதித்துறை நடுவர் ஒட்டன்சத்திரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **(முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 , புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . இவ்வழக்கை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.10.2020 ம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்திவேல், சிலம்பரசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தேன். சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். **(பார்வைமகசர் அ.சா.ஆ. 7, மாதிரிவரைபடம் அ.சா.,ஆ.8**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . பின்பு சாட்சிகள் பழனிச்சாமி, சந்தணகருப்பையா, ஜெயா, சௌந்திரபாண்டி, சக்திவேல், சிலம்பரசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.சவின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்து சான்று வழங்கிய மருத்துவர் விஜயகுமார் அவர்களிடம் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்று அவரை விசாரணை செய்து 161(3) கு.வி.மு.சவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு இவ்வழக்கில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த மு.நி.காவலர் சௌந்திரபாண்டி அவர்களை விசாரணை செய்து 161(3) கு.வி.மு.சவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் 1முதல் 5 மற்றும் 7 எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டபடியாலும் 6வது எதிரி தலைமறைவாக இருந்ததாலும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. 30.12.2020ம் தேதி இவ்வழக்கில் சட்டபிரிவுகளை 147,148, 294(பி), 324,506(2) இதசவிலிருந்து 147,148, 294(பி), 326,506(2) இதசவாக சட்டமாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன். (சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 30.12.2020ம் தேதி எதிரிகள் மீது 147,148,294(பி), 326,506(2) இதச ஆக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1) முதல்தகவல் அறிக்கையை பதிவுசெய்த மு.நி.காவலர் சௌந்திரபாண்டி புகார்தாரரிடமிருந்து எந்த புகார்வாக்குமூலமும் பெறாமல் வழக்கின் தோதுக்கு ஏற்ப புகார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் போன்ற வழக்கு ஆவணங்களை காவல்நியைலத்தில் வைத்து தயார்செய்துள்ளேன் என்றா்ல் சரியல்ல. 1முதல் 4 வரையிலான சாட்சிகளின் 161(3) கு.வி.மு.ச. வின் வாக்குமூலங்களை நிலையத்தில் வைத்தே தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லாத காரணத்தால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். தலைமறைவான 6வது எதிரி குறித்த விவரம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அவர் வீட்டில் இல்லை. அவர் என்ன வேலை செய்கிறார் என்பதை பொறுத்த அவரை பற்றிய விவரங்கள் எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் இல்லை. 6வது எதிரி அரசு பணியில் உள்ளார் என்பதை குறிப்பிட்டால் சம்பவ நேரத்தில் அவர் சம்பவ இடத்தில் இல்லை என்பது உறுதியாகிவிடும் என்பதால் நான் குறிப்பிடவில்லைஎன்றால் சரியல்ல. 6ம் எதிரி பற்றிய முக்கிய விவரங்களை நான் வேண்டுமென்றே நான் இந்த வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல். இந்த வழக்கின் காயச்சான்றுகள் பெற்றும் மருததுவரை விசாரணை செய்தும் மிகுந்த பரிசீலனைக்கு பின் கவனத்துடன் குற்ற

இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காயச்சான்றில் 12 நபர்களால் தாக்கப்பட்டதாக 9 ஆண்கள் , 3 பெண்களால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரங்களை மருத்துவரை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விவரங்கள் காயச்சான்றுகள் பெறும் போதே எனக்கு தெரியும் என்பதாலும் நான் வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றாலும் சரிய ல்ல.குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை யாரையும் விசாரிக்காமல் எனக்கு முன்னர் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்த மு.நி.காவலர் சௌந்திரபாண்டி என்பவருக்கு ஆதரவாக பிழையான குற்ற இறுதி அறிக்கை தயார்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2024.02.12 17:18:52 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/02/2024